





# தொழில் துறை

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

### மானியக் கோரிக்கை எண். 27




**அறிவிப்புகள்**

**2020-2021**

# தொழில் துறை

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

மானியக் கோரிக்கை எண். 27

அறிவிப்புகள்
2020–2021

**சி.வி.சண்முகம்**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

## தொழில் துறை
## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்
## அறிவிப்புகள்
## 2020 – 2021

### 1. புவியியல் மற்றும் சுரங்கத்துறை தலைமை அலுவலகத்திற்கு ரூபாய் 20 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுதல்

புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் தலைமை அலுவலகமானது 1983 ஆம் ஆண்டு கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் துவங்கப்பட்டு, பணியாளர் மற்றும் கனிம நிர்வாக பிரிவு, துரப்பண பிரிவு, ஆய்வுக்கூடம், அருங்காட்சியகம் மற்றும் நூலகம் ஆகிய பிரிவுகளைக் கொண்டு, 50 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான கட்டடத்தில் போதுமான இடவசதியின்றி 91 செண்ட் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது. இத்துறையின் பணியாளர்கள் மற்றும் நிர்வாக நலனை கருத்தில் கொண்டு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** தற்போதுள்ள பழைய அலுவலக கட்டடத்திற்கு பதிலாக அதே இடத்தில் 40,000 சதுர அடியில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய 7 அடுக்கு மாடி கட்டடம் ரூபாய் 20 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும். G.O (D) No: Ind (E.1) dept. dt: 22.5.20

## 2. புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் பணியாளர் கட்டமைப்பினை வலுப்படுத்த ஆண்டிற்கு ரூபாய் 5 கோடி செலவில் புதிய பணியிடங்கள் உருவாக்குதல்

புவியியல் மற்றும் சுரங்கத்துறை 1983 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட போது ஆண்டு கனிம வருவாய் ரூபாய் 2 கோடியாக இருந்தது. கனிம நிர்வாகத்தில் தொடர்ந்து எடுக்கப்பட்ட பல்வேறு சீரிய நடவடிக்கைகளால் 2018–2019ஆம் நிதியாண்டில் கனிம வருவாய் ரூபாய் 1186 கோடியாக உயர்ந்துள்ளது. இத்துறை கனிம நிர்வாக பணிகளை குறைந்தபட்ச பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது. பணியாளர் கட்டமைப்பினை வலுப்படுத்தி கனிம நிர்வாகத்தினை சீரிய முறையில் செயல்படுத்தும் பொருட்டு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** புவியியல் மற்றும் சுரங்கத்துறைக்கென புதிதாக 26 தொழில்நுட்ப பணியிடங்கள் உட்பட சுமார் 120 புதிய பணியிடங்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 5 கோடி தொடர் செலவினத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Govt Lr.No:3757/E.1/2020-1 dt 22.5.2020



## 3. புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் தற்போது தொடர் பணி நீட்டிப்பு பெற்றுவரும் 222 பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாக மாற்றுதல்

புவியியல் மற்றும் சுரங்கத்துறை 1983 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு பிறகு பல்வேறு அரசாணைகள் மூலம் உருவாக்கப்பட்ட 442 தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியிடங்களில் 222 பணியிடங்கள் பணி நீட்டிப்பு பெறும் இனங்களாக தொடர்வதால், இப்பணியிடங்களுக்கு ஆண்டுதோறும் பணியிட தொடர் நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, துறையின் பணியாளர் நலன், நிர்வாக நலன் கருதியும் மற்றும் இப்பணியிடங்களின் அவசிய தேவையினைக் கருத்தில் கொண்டும் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் தற்போதுள்ள 222 பணி நீட்டிப்பு பெற்று வரும் இனங்கள் நிரந்தர பணியிடங்களாக மாற்றி அமைக்கப்படும்.

## 4. விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருவக்கரை கிராமத்தில் தொன்மையான கல்மரப்படிமங்களை பாதுகாக்கும் நோக்கில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் புவியியல் பூங்கா (Geo Park) அமைத்தல்

விழுப்புரம் மாவட்டத்தில் வானூர் வட்டம் திருவக்கரை கிராமத்தில் சுமார் 2 கோடி வருடங்களுக்கு முன்பு உருவான தொன்மையான கல்மரப் படிமங்கள் உள்ளது. அவை கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் புவியியல் துறை ஆய்வாளர்களுக்கு அவற்றின் தொன்மை மற்றும் உருவான சூழல் குறித்து ஆய்வு மேற்கொள்ள பெரிதும் பயன்படும். இந்த அரிய படிமங்களை ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக பேணி பராமரித்திடும் பொருட்டு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 5 கோடி திட்ட மதிப்பீட்டில் அப்பகுதியில் புவியியல் பூங்கா (Geo Park) ஒன்று அமைக்கப்படும்.

Govt Lr No: 3758/E.1/2020-1 dt: 22.5.2020



## 5. திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ரூபாய் 4 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுதல்

கனிம நிர்வாக நலன் கருதி நான்கு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் சேலம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 4 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் கட்டப்படும்.

G.O. issued

## 6. தேசிய கனிம அகழாய்வு அறக்கட்டளை மற்றும் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு மேற்கொள்ள தலைமையகத்திற்கு 2 புதிய ஜீப்புகள் வாங்குதல்

தேசிய கனிம அகழாய்வு அறக்கட்டளை நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் கனிம அகழாய்வு பணிகள் மற்றும் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள் ஆகியவற்றை தணிக்கை மேற்கொண்டு அவற்றின் செயல்பாடுகளை துரிதப்படுத்தி மக்களின் பயன்பாட்டிற்கு விரைவாக கொண்டு செல்லும் நோக்கோடு, **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 20 இலட்சம் செலவினத்தில் தலைமையகத்திற்கு 2 புதிய ஜீப்புகள் வாங்கப்படும்.

G.O.(D) No: 58, Industries (E-1) dept dt: 22.5.2020



## 7. கனிம நிர்வாகம் தொடர்பான தகவல்களை மின்னணு வடிவமாக்கல்

புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் கனிம நிர்வாகத்தினை திறம்பட மேற்கொள்ள கனிம குத்தகைகள், கனிம வருவாய் போன்ற தகவல்களை மின்னணு வடிவமாக்கி தகவல் பரிமாற்றத்தினை எளிமையாக்கும் நோக்கோடு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 10 இலட்சம் செலவில் கனிம நிர்வாகம் தொடர்பான தகவல்கள் மின்னணு வடிவமாக்கப்படும்.

## 8. புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

கனிம நிர்வாக சட்டம் மற்றும் விதிகளை நடைமுறைபடுத்துதல், மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் கனிம அகழாய்வு பணிகளை நிர்வகித்தல் போன்ற பணிகளை திறன்பட மேற்கொள்ள 10 தலைமையிட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்களுக்கு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் 10 மடிக்கணினிகள் வழங்கப்படும்.

G.O.(Ms) No: 57
Industries (E-1) dept
dt: 27.5.2020



## 9. மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களை மின்னணு இணைய பயன்பாட்டின் கீழ் கண்காணிக்க திட்டம் செயல்படுத்துதல்

மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின் மூலம், சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் அமைந்துள்ள பகுதி மற்றும் அப்பகுதி வாழ்மக்களின் மேம்பாட்டிற்காக 1524 நலத்திட்டங்கள் ரூபாய் 409 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை சிறந்த முறையில் கண்காணித்து அவற்றினை விரைந்து செயல்படுத்தி மக்களின் பயன்பாட்டிற்கு விரைவாக கொண்டு செல்லும் பொருட்டு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய்10 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு இணைய பயன்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 10. இந்திய அருமணல் நிறுவனத்துடன் (IREL) இணைந்து ஒரு கூட்டாண்மை நிறுவனத்தை உருவாக்கி, தமிழக கடற்கரையோர பகுதிகளில் கிடைக்கப்பெறும் தாதுமணல் கனிமத்தினை பிரித்தெடுத்து, சந்தைப்படுத்த நடவடிக்கை எடுத்தல்

தமிழ்நாடு கனிம நிறுவனம், IREL நிறுவனத்தோடு இணைந்து தாதுமணல் வர்த்தகத்தில் ஈடுபட உள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாதுமணல் கனிமங்கள் உள்ள பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** தமிழ்நாடு கனிம நிறுவனம் IREL–உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, ஒரு கூட்டாண்மை நிறுவனத்தை தொடங்கி தமிழகத்தின் கடற்கரை பகுதிகளில் கிடைக்கப் பெறுகின்ற தாதுமணல் கனிமங்களை பிரித்தெடுத்து சந்தைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

**சி. வி. சண்முகம்**
**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**